மலர் 1 இதழ் 3 ஜனவரி, 2017 ISSN : 2454-3993

# தமிழண்ணலின் இறைச்சி கோட்பாடு

முனைவர் கதி. முருகேசன்
உதவிப்பேராசிரியர், தமிழ் உராய்வுமையம்
கணேசர் கலை அறிவியல் கல்லூரி. மேலைச்சிவபுரி

பாண்டிநாடு ஈன்றெடுத்த தமிழறிஞர்களுள் சிறந்த ஆய்வுநுட்பமும் ஒப்பிலக்கியக் கோட்பாட்டில் தேர்ச்சியும் உடையவர் தமிழண்ணல். குறிப்பாகச் சங்க இலக்கியத்திலும் தொல்காப்பியத்திலும் அவர் பெற்றுள்ள புலமையை அறிவிக்கும் சான்றுகளாக உரைநூல்களும் ஆராய்ச்சி நூல்களும் நின்றிலங்குகின்றன. இக்கட்டுரை தமிழண்ணலின் "இறைச்சி" குறித்த சிந்தனைகளை ஆராய்கிறது.

சங்க இலக்கியத்தைக் கற்றுத் துறைபோகியவர்களும் நுண்ணிதின் ஆராய்ந்தவர்களும் இன்றைக்கும் புரிந்துகொள்வதற்கு அரிதாகவுள்ள ஓர் இலக்கிய உத்தி இறைச்சி. தொல்காப்பியர்

இறைச்சிதானே உரிப்புறத் ததுவே (1175)
இறைச்சியிற் பிறக்கும் பொருளுமார் உளவே (1176)
அன்புறுதகுந இறைச்சியுள் சுட்டலும்
வன்புறை ஆகும் வருந்திய பொழுதே (1177)

என இறைச்சி குறித்துக் கூறியுள்ள சூத்திரங்கள் சிந்திக்கத்தக்கன. இச்சூத்திரங்கள் இறைச்சி குறித்து அறிந்து கொள்ளக் கிடைக்கும் அடிப்படைச் சான்றுகளாகும். தொடக்கக் காலத்தில் இறைச்சி குறித்த தெளிவான வரையறை உருவாக்கம் பெறவில்லை. இதனை உணர்த்தும்முகமாகத் தமிழண்ணல் "உள்ளுறை தவிர இறைச்சி என்பது பிறிதொரு கோட்பாடு அல்லது இரண்டும் ஒன்றா என்பதில் கருத்து வேறுபாடு உண்டு. உள்ளுறை ஐந்தில் முதலாவதாகிய உடனுறையே இறைச்சி என்பர் நச்சினார்க்கினியர். தமிழண்ணல் சங்க இலக்கியக் கொள்கைகள் ப.67) வே. வேங்கடராசுலுரெட்டியாருக்கும் இக்கருத்து உண்டு. (ப.67). என்னும் கருத்துகளை முன்வைக்கிறார். மேலும் இறைச்சி இன்னது என விளக்குவதில் உரையாசிரியர்கள் மற்றும் பதிப்பாசிரியர்களிடம் காணப்படும்

இடர்களை "ஐங்குறுநூற்றுக்கு உரை எழுதிய அவ்வை சு.துரைசாமிப்பிள்ளை அதன் முன்னுரையில் "இறைச்சிப் பொருள்கோள் என ஒன்றைத் தொல்காப்பியனார் கூறினார் எனக் கோடல் உண்மையாகத் தோன்றவில்லை" என்பர். (ப.68) "நற்றிணைக்கு உரை எழுதிய பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயரோ" மிகப் பெரும்பாலான பாடல்களுக்கு-உள்ளுறை இடம்பெற்ற பாடல்களையும் சேர்த்து "இறைச்சிப் பொருள்" என்றே எழுதிப் போயினர்". "உ.வே.சா அவர்கள் தமது குறுந்தொகை உரையில் உள்ளுறை, இறைச்சி வருமிடங்கள் அனைத்திலும் "குறிப்பு" என்றே எழுதிவிட்டார்கள்". (68)என்னும் பகுதிகள் மூலம் விளக்குகிறார். தெள்ளிய அறிவுமிக்கவராகிய தொல்காப்பியர் எந்த இலக்கணப்பகுதியையும் முழுமையாக விளக்காமல் விட்டுச் செல்லவில்லை என்பது தொல்காப்பியத்தை நுண்ணிதின் கற்றவர்களுக்கு விளங்கும் உண்மையாகும். அத்தகையதொரு புலமை வாய்த்தவராக இருந்த காரணத்தால் தமிழண்ணல் பிற ஆய்வாளர்கள் தொட அஞ்சிய பகுதிகளைத் தன்னுடைய ஆய்வுக் களமாக அமைத்துக் கொண்டார். தொல்காப்பியரின் இலக்கண உத்திகளில் குறிப்பிடத்தக்கது மாட்டேறு. மாட்டேறின் அடிப்படையில் இலக்கணத்தின் நுட்பமான கூறுகள் முக்கியத்துவம் கருதி வெவ்வேறு இடங்களில் எடுத்தாளப்படும். இவ்வுத்தி முறையினையே தொல்காப்பியர் இறைச்சியை விளக்கவும் பயன்படுத்தியுள்ளார் என்பதைத் தமிழண்ணல்

இறைச்சிப் பொருள்வயின் செய்யுளும் கிளக்கும்
இயர்பெயர்க் கிளவிஉயர்திணைசுட்டா
நிலத்துவழிமருங்கில் தோன்றலான (681)
புணர்ந்துடன் போகியகிழவோள் மனையிருந்து
இடைச்சுரத்து இறைச்சியும் வினையும் சுட்டி
அன்புறுதக்க கிளத்தல் தானே
கிழவோள் செய்வினைக்கு அச்சமாகும் (1094)

என்னும் சூத்திரங்களின் வழி எடுத்துக்காட்டுகிறார். இச்சூத்திரங்கள் இறைச்சிபற்றிப் புரிந்துகொள்ள உதவுகின்றன. "நில அடிப்படையில் தோன்றுவதால் செய்யுளுள் கருப்பொருளாகத் தோன்றுவனவற்றில் கடுவன் முதுமகள் வன்பறழ்க் குமரி என உயர்திணை ஈறு காணப்படினும் அவை உயர்திணையைக் குறிக்கமாட்டா". "முன்பு களவுக் காலத்துத் தலைமகனுடன் சுரவழியில் சென்று பழகிய தலைவி கற்புக் காலத்தில் கணவன் பிரியவே மனையில் தனித்திருந்து வருந்தும்போது பறவை, விலங்கு முதலிய கருப்பொருள்கள்களும் அவற்றின் காதற் செயல்களும் பற்றி நினைவாள். அங்ஙனம் எண்ணித் தலைவன் தன்மீது அன்புறுவதற்குத் தக்கவற்றைக் கூறி அதனால் தலைவன் தன் நினைவுவரப பெற்று வினை மேற்செல்லாமல் திரும்பி விடுவானோ என்று தலைவி அஞ்சுவது உண்டு. இது வேகிழவோன் செய் வினைக்கு அச்சமாகும்". (பக்.68-69) மேற்கண்ட சூத்திரத்திலிருந்து "இறைச்சியும் வினையும்" என்னும் தொடரை எடுத்துக்கொண்ட தமிழண்ணல் அதற்கு பறவை, விலங்கு முதலிய கருப்பொருள்களும் அவற்றின் செயல்களும் என்று பொருள் கொள்கிறார். மேலும் ஆற்றிடைக்

கண்டபொருளும் இறைச்சியும் (1116) என்னும் சூத்திரத்திற்கு "ஆண்டு (செல்சுரத்தில்)மாவும் புள்ளும் புணர்ந்து விளையாடுவனவற்றை அவ்விருவர்க்குமாயினும் தலைவர்க்கேயாயினும் காட்டியும்"(ப.69) என்னும் நச்சினார்க்கினியர் உரையை எடுத்துக்காட்டி இறைச்சிப் பொருள் கருப்பொருளை இடமாகக்கொண்டு வருவதை நுட்பமாக உணர்த்துகிறார்.

தலைவனும் தலைவியும் தாம் உணர்த்த விரும்பிய செய்தியைக் கருப்பொருளின் மீது ஏற்றிக் கூறுகின்றனர். அவ்வாறு கூறும்போது இறைச்சி தலைவனின் நாட்டுக்கு அடைமொழியாக வந்தால் வேறுபொருள் தராது என்பதையும் விளக்குகிறார். பொருள் தேடுவதைத் தன் நோக்கமாகக் கொண்டு தலைவியைப் பிரிந்து செல்லும் தலைவன் இடைச்சுர வழியில் தலைவியை நினைக்கிறான். இத்தகைய நினைவு எழுவதற்கு ஆங்கு நிலவும் சூழல் காரணமாகிறது.

அடி தாங்கும் அளவின்றி அழலன்னவெம்மையால்
கடியவேகனங்குழாஅய் காடென்றார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறெனவும் உரைத்தனரே
இன்பத்தின் இகந்தொரீஇ இலைதீய்ந்த உலவையால்
துன்புறூஉம் தகையவேகாடென்றார் அக்காட்டுள்
அன்புகொள் மடப்பெடை அசை இயவருத்தத்தை
மென்சிறகரால் ஆற்றும் புறவெனவும் உரைத்தனரே
கன்மிசைவேய்வாடக் கனைகதிர் தெறுதலால்
துன்னரூஉம் தகையவேகாடென்றார் அக்காட்டுள்
இன்னிழல் இன்மையான் வருந்தியமடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலையெனவும் உரைத்தனரே (கலி.11)

இப்பாடலில் தலைவி தன் தோழியிடம் தலைவன் தன்னிடம் விரைவில் மீண்டு வருவான் என உறுதியாகக் கூறுகிறாள். தலைவன் முன்பு ஒருமுறை பொருள் தேடச்சென்ற காலத்தில் தான் சென்ற சுரவழியில் விலங்குகள் எல்லாம் அன்புடன் இருப்பதைக் கண்டான். பொருள் தேடி மீண்ட காலத்தில் சுரவழியில் தான் அனுபவித்த துயரங்களை எல்லாம் எடுத்துக் கூறும்போது விலங்குகள் பறவைகளின் அன்புறு செயல்களையும் கூறினான். மீண்டும் அவன் பொருள் தேடச்சென்ற காலத்தில் தலைவி நனவோட்டமாக அதனை நினைத்துப்பார்க்கிறாள். ஆகத் தான் மனத்தில் நினைத்தவற்றைக் குறிப்பாக உணர்த்த வேண்டியவருக்கு உணர்த்துவதே இறைச்சியின் பணி என்பது விளங்கும். தமிழண்ணல் தொல்காப்பியம் சங்க இலக்கியம் ஆகியவற்றின் வழிநின்று "உரிப்பொருளின் புறத்தே நின்று அதன் கருத்தைச் சிறப்பிக்கப் பயன்படுவதே இறைச்சி "என்று சுருக்கமான விளக்கத்தை முன்வைப்பதோடு கருப்பொருளில் இறைச்சி பயின்று வரும் பாங்கினையும் விளக்குகிறார்.

நிலத்தினும் பெரிதேவானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரளவின்றேசாரல்
கருங்கோற் குறிஞ்சிப் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடுநட்பே (குறுந். 3)

இப்பாடலில் இறைச்சி பிறிதொரு பொருளைத் தராமல் தலைவனின் நாட்டுக்கு மட்டும் அடைமொழியாக வந்திருக்கிறது.

கன்றுதன் பயமுலைமாந்த முன்றில்
தினைபிடி உண்ணும் பெருங்கல் நாட ( குறுந். 225)

என்னும் பாடலில் யானைகளின் அன்புறு வாழ்க்கை தலைவனின் நாட்டுக்கு அடையாக வந்தாலும் அடைமொழியைக் கடந்து பிறிதொரு பொருள் தோன்றுவதைக் காண்க. யானைக் குடும்பம் இன்புற்றிருப்பது போல் நீயும் பொருள் தேடிவந்து இவளை மணந்து இன்புற்றிருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

நசைபெரிது உடையார் நல்கலும் நல்குவர்
பிடி பசிகளை இயபெருங்கை வேழம்
மென்சினையாஅம் பொளிக்கும்
அன்பினதோழி அவர் சென்றவாறே (குறுந். 37)

இப்பாடல் குறிப்பாகத் தன் மனக்கருத்தை நினைத்தவாறு வெளிப்படுத்தக் கருப்பொருளில் குறிப்பாக உயிரினம் சார்ந்த கருப்பொருள் உதவுவதை வெளிப்படுத்துகிறது.

தமிழண்ணல் இறைச்சி குறித்த ஆய்வின் இறுதியாகக் கூறும் செய்திகள் இறைச்சி குறித்த ஆய்வினை மேற்கொள்பவர்களுக்குத் தக்கதுணையாக அமைபவை. "இறைச்சி என்பது பொதுவாகக் கருப்பொருளையும் சிறப்பாக உயிரினத்தையும் குறிப்பது. உயிரினங்களின் வாழ்வு மனித வாழ்வைப் போன்றே கூறப்பட்டாலும் அது உரிப்பொருளாகக் கொள்ளப்படமாட்டாது. ஏனெனில் ஐந்திணையில் அக ஒழுக்கம் மக்களுக்கு உரியது. இறைச்சியில் அடைமொழியாக மட்டும் வரும் இறைச்சியும் பிறிதொரு பொருள் கொள்ளத்தக்க இறைச்சியும் உண்டு.

தமிழண்ணலின் படைப்புகள் ஆழ்ந்து கற்பதற்கு உரியவை; ஆழமான பொருளமைப்புடையவை. அவருடைய இறைச்சி குறித்த ஆய்வு; சங்க இலக்கியப் பாக்களைப் பொருளுணர்ந்து படிக்க வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் நுட்பமான ஆய்வுகள் பலவற்றை மேற்கொள்ளவும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தருகிறது.

**பார்வை நூல்**

1. தமிழண்ணல் சங்க இலக்கிய ஒப்பீடு மதுரை மீனாட்சி புத்தக நிலையம், 1985: